### வண்ணாரப்பேட்டை-விம்கோநகர்

# மெட்ரோ ரெயில் பாதையை பசுமையாக மாற்ற திட்டம்

## செடிகள் வளர்க்க டெண்டர் விடப்படுகிறது

சென்னை, டிச. 16—

வண்ணாரப்பேட்டையில் இருந்து திருவொற்றியூர் விம்கோநகர் வரை சென்னை மெட்ரோ ரெயிலின் முதல்கட்ட விரிவாக்க பணி நிறைவடைகிறது.

**உயர்மட்ட பாதை**

9.51 கி.மீ. தொலைவில் உள்ள இந்த திட்ட பணிகள் ரூ.3,770 கோடி செலவில் நடைபெறுகின்றன. முதல்கட்ட விரிவாக்க திட்டத்தின் சுரங்கப்பாதையில் தியாகராஜா் கல்லூரி, கொருக்கு பேட்டை ரெயில் நிலையங்களும், உயர்மட்ட பாதையில் தண்டையார்பேட்டை, சுங்கச்சாவடி, தாங்கல், கவுரி ஆசிரமம், திருவொற்றியூர், விம்கோநகர் ஆகிய 6 மெட்ரோ ரெயில் நிலையங்களும் அமைய உள்ளன.

இந்த மாத இறுதியில் சோதனை ஓட்டமும், அடுத்த மாதம் பாதுகாப்பு ஆணையர் ஆய்வுக்கு பிறகு ரெயில் சேவை தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த பாதையின் நடுநிலைப் பகுதிகளை பசுமையாக மாற்ற சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. தோட்டக்கலை மற்றும் இயற்கை நிபுணர்கள் மூலமாக பாதையின் மைய பகுதிகளை பசுமையாக அலங்கரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

**டெண்டர்**

இதற்காக டெண்டர் விடப்பட்டுள்ளதாகவும், விரைவில் டெண்டர் இறுதி செய்யப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிகாஸ் என்னும் செடி, குட்டை பனைமரம் போன்ற தாவர வகை செடிகள் வளர்க்கப்பட உள்ளன. சூரிய ஒளி இல்லாமல் வளரும் தாவரங்களை இந்த பாதையில் வளர்க்க திட்டமிடப்படுகிறது.

தாவரம் செழிப்பாக வளருவதற்காக மண்புழு உரம், கோகோபித் ஆகியவை கலக்கப்படும். இந்த பாதையில் செடிகள் வளர்த்து பசுமையாக மாற்றுவதற்காக டெண்டர் இறுதி நிலையில் உள்ளது.

**பராமரிப்பு**

2 ஆண்டுகளுக்கு தாவரங்களை பராமரிக்க வேண்டும். செடிகளை வளர்க்க தேவையான நடவடிக்கை எடுக்கவேண்டியது ஒப்பந்ததாரர்கள் பொறுப்பு. இந்த திட்டம் எப்படி செயல்படுத்தப்படுகிறது என்ற அடிப்படையில் மற்ற பாதைகளின் நடுப்பகுதிகளில் பசுமையாக மாற்ற முயற்சி எடுக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.